இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

கலைஞர் 100 1924 - 2024

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்:10.8.1942 – முரசு: 83 – ஒலி: 102 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 06 – வியாழக்கிழமை 21 நவம்பர் 2024 – திருச்சி ★★ 12+8 பக்கங்கள்

Established: 10.8.1942 - Volume: 83 - Issue 102 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 06 - Thursday 21 November 2024 - Trichy ★★ 12+8 Pages ₹ 5.00



### எல்.ஐ.சி. இணையதளத்தில் இந்தியைத் திணிக்கும்

## மொழிக் கொடுங்கோன்மையை நிறுத்திடுக!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, நவ. 21 -**

**எல்.ஐ.சி. இணையதளத்தில் இந்தியைத் திணிக்கும் மொழிக் கொடுங்கோன்மையை நிறுத்திடுக என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

எல்.ஐ.சி. இணையதளத்தில் இந்தித் திணிப்பை கண்டித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



எல்.ஐ.சி. இணையதளம் இந்தித் திணிப்புக்கான கருவியாகச் சுருக்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழிக்கு மாற்றுவதற்கான தெரிவும் கூட இந்தியில்தான் உள்ளது.

இது இந்தியாவின் மொழிப் பன்மைத்துவத்தை நசுக்கும் வலுக்கட்டாயமான பண்பாட்டு, மொழித் திணிப்பேயன்றி வேறல்ல. இந்தியர்கள் அனைவரின் ஆதரவோடும் வளர்ந்தது தான் எல்.ஐ.சி! அத்தகைய நிறுவனம் தனது வளர்ச்சிக்குப் பங்களித்த பெரும்பான்மையான மக்களை இப்படி வஞ்சிக்கத் துணியலாமா?

உடனடியாக இந்த மொழிக் கொடுங்கோன்மையை நிறுத்திப் பழையபடி ஆங்கிலத்துக்கு மாற்ற வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

### கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர் தங்கம் தென்னரசு முன்னிலை!

## கலைஞர் 100 வினாடி - வினா மாபெரும் இறுதிப் போட்டி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசு வழங்கி சிறப்புரை!

சென்னை, நவ .21 -

திராவிட இயக்க வரலாறு, முத்தமிழறிஞர் கலைஞர் வரலாறு, திராவிட மாடல் அரசின் சாதனைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கழக மகளிர் அணி சார்பில், கழக துணைப் பொதுச் செயலாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் மாபெரும் அறிவு திருவிழாவாக கலைஞர் 100 வினாடி வினா போட்டிகள் 12 மண்டலங்களாக நடைபெற்று வந்தன.

கலைஞர் 100 வினாடி - வினா மாபெரும் இறுதிப் போட்டி 23.11.2024 - சனிக்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பரிசு வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இதில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் தொடக்கவுரையாற்றுகிறார். கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியை கழக தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின் தொகுத்து வழங்குகிறார். கழக மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் அமைச்சர் கயல்விழி செல்வராஜ், காஞ்சனா கமலநாதன், சங்கரி நாராயணன், காரல் மார்க்ஸ், சத்திரமுகி சத்யவாணி முத்து, வாசுகி ரமணன், காயத்ரி சீனிவாசன், குமரி விஜயகுமார், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பவானி ராஜேந்திரன், மலர் மரகதம், அங்கையற்கண்ணி, சத்யா பழனிகுமார், சேலம் சுஜாதா, ரேகா பிரியதர்ஷினி, விஜிலா சத்யானந்த், மாலதி நாகராஜ், ராணி ரவிச்சந்திரன், அமலு விஜயன் எம்.எல்.ஏ., மாலதி நாராயணசாமி, மோ. தேன்மொழி, உமா மகேஸ்வரி, ஜெசி பொன்ராணி, ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., அ.ரியா, யாழினி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

### மணிப்பூர் வன்முறை தொடர்ந்து தீவிரமாகிறது!

## உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலகவேண்டும்!

### காங்கிரஸ் வலியுறுத்தல்!

**மணிப்பூர், நவ. 21 -**

**மணிப்பூரில் வன்முறை தொடர்ந்து தீவிரமாகி வருகிறது. மணிப்பூரில் அமைதி திரும்ப வழி காணாத உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலகவேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது!**

மணிப்பூர் மெய்தேய் இனத்தைச் சேர்ந்த ஆறு பேர் கடந்த நவம்பர் 11ஆம் தேதி (திங்கட்கிழமை) முதல் காணாமல் போனதாக வழக்குப் பதிவு செய்து, போலீசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் காணாமல் போனதாக வழக்கு பதிவுச்செய்யப்பட்ட ஆறு பேரில் 3 பேரின் (1 பெண் மற்றும் 2 குழந்தைகள்) உடல் அசாம் மணிப்பூர் எல்லைக்கு அருகே சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மேலும், ஆறு பேரில் மீதமுள்ள 3 பேர் (2 பெண்கள், 1 குழந்தை) மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தின் பராக் நதி கரையில் சடலமாக மீட்கப்பட்டனர். 6 பேரின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக அசாமில் உள்ள சில்சார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு (SMCH) அனுப்பி வைக்கப்பட்டன. இதனால் மணிப்பூர், இம்பால் தலைநகரில் பெரும் பதற்றமான சூழல் நிலவியது.

இந்த சம்பவத்தால் ஆத்திரமடைந்த மெய்தேய் மக்கள் மணிப்பூர் சட்டப்பேரவை மாளிகையில் இருந்து 200 மீட்டர் தொலைவில் இருந்த இம்பால் நகரின் தங்க்மெய்பண்ட் பகுதியில் சாலையின் நடுவில் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். அந்த போராட்டத்தின் போது திடீரென போராட்டக்காரர்களுக்கும், ஜிரிபாம் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சூடு சம்பவம் நிகழ்ந்த நிலையில், அந்த பகுதியைச் சேர்ந்த 10 குகி ஸோ இன இளைஞர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவமனை நிர்வாகம் தகவல் வெளியிட்டது.

இந்த சம்பவத்தால் மணிப்பூரில் மேலும் பரபரப்பான சூழல் ஏற்பட்டது. இந்நிலையில் இச்சம்பவம் குறித்து அறிக்கை வெளியிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் சபம் ரஞ்சன் கூறியதாவது, “இந்த விவகாரம் குறித்து அமைச்சரவைக்



கூட்டத்தில் விவாதிக்கப்படும். பொதுமக்களின் உணர்வுகளுக்கு அரசு எப்போதும் மதிப்பளிக்கும். இந்த வாக்குறுதி தவறினால் எனது பதவியை ராஜினாமா செய்கிறேன்,” எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இதுவரை இந்த சம்பவம் குறித்து எந்த நடவடிக்கையும் அரசு எடுக்கப்படவில்லை என கூறி போராட்டக்காரர்கள் இம்பாலின் ஹீங்காங்கில் உள்ள முதலமைச்சர் பிரேன் சிங்கின் இல்லத்தை முற்றுகையிட்டு தீ வைக்க முயன்றனர். ஆனால் பாதுகாப்புப் படையினர் காவலுக்கு இருந்த நிலையில் போராட்டக்காரர்களை கலைத்து அனுப்பினர்.

இதையடுத்து, இம்பாலின் பல்வேறு பகுதிகளில் போராட்டம் நடைபெற்றதால் பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி போராட்டகரர்களை கலைக்க முயன்றனர்.

அப்போது முதலமைச்சரின் மருமகன் உள்பட ஆறு எம்.எல்.ஏக்கள் வீட்டில் தாக்குதல் நடத்திய போராட்டக்காரர்கள், மூன்று பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் வீட்டை சூறையாடினர். அதில் முதலமைச்சரின் மருமகன் ஆர்.கே. இமோ சிங்கின் கார் உள்பட சொத்துகளுக்கு தீ வைத்துக் கொளுத்தினர்.

இந்த பதற்றமான சூழலை கட்டுக்குள் கொண்டுவர மணிப்பூர் அரசு இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு, பிஷ்னுபூர், தௌபால், கக்சிங், காங்போக்பி மற்றும் சுராசந்த்பூர் ஆகிய மாவட்டங்களில் இணைய சேவைகளை நிறுத்தி வைத்து, ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தது.

**காங்கிரஸ் கண்டனம்!**

இதுகுறித்து, செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெய்ராம் ரமேஷ், “மணிப்பூர் விவகாரம் குறித்து அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு பிரதமர் மோடி அழைப்பு விடுக்க வேண்டும். மணிப்பூர் பற்றி எரிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மோடிக்கு, மணிப்பூருக்குச் செல்ல மட்டும் நேரமில்லையா?. வன்முறைக்கு தார்மீக பொறுப்பேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தனது பதவியை ராஜினாமா செய்யவேண்டும்” என வலியுறுத்தினார்.

### வங்கக் கடலில் நவ.23ல் காற்றழுத்த தாழ்வுப் பகுதி!

### சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, நவ, 21 -*

தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இதன் காரணமாக, 23ம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும். இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும், என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக தமிழகத்தில் அடுத்த 6 நாட்களாக பரவலாக மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: -

தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகக்கூடும். இதன் காரணமாக, 23ம் தேதி வாக்கில் தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்.

இது மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, அதற்கடுத்த இரு தினங்களில் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும்.

நவ.21 முதல் நவ.24ம் தேதி வரையில், தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும்காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்

நவ.25ம் தேதி, கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### திருப்பெரும்புதூரில் இயங்கிவரும்

## பாக்ஸ்கான் தொழிற்சாலை ரூ.1,792 கோடியில் விரிவாக்கம்!

### கூடுதலாக 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு!


*சென்னை, நவ. 21 -*

சென்னைதிருப்பெரும்புதூரில் இயங்கி வரும் பாக்ஸ்கான் தொழிற்சாலையை ரூபாய் 1,792 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்ய அந்நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சென்னை திருப்பெரும்புதூரை அடுத்த சுங்கு வார்சத்திரம் சிப்காட் வளாகத்தில் பாக்ஸ்கான் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

பாக்ஸ்கான் தொழிற்சாலையில் ஆப்பிள் ஐ போன் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 2 ஆயிரத்து 601 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்பட்டு வரும் இந்த தொழிற்சாலை மூலம் 40 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் ப்ரீமியம் வகை



மொபைல் போன் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய பாக்ஸ்கான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 3.55 லட்சம் சதுர அடியாக உள்ள கட்டுமான பகுதியை 4.79 லட்சம் சதுர அடியாக விரிவாக்கம் செய்ய பாக்ஸ்கான் நிறுவனம் முடிவு செய்துள்ளது. ஆயிரத்து 792 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய சுற்றுச்சூழல் அனுமதி கோரி பாக்ஸ்கான் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

பாக்ஸ்கான் ஆலை விரிவாக்கத்தின் மூலம், கூடுதலாக 20 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிரதமர் மோடி – அதானி தொடர்பு பற்றி கிண்டல்!

## 50 சதவீத இடஒதுக்கீடு உச்சவரம்பு நீக்கப்படும்!

### மும்பையில் ராகுல் காந்தி பேட்டி!

மும்பை, நவ. 21 –

50 சதவீத இடஒதுக்கீடு உச்சவரம்பு நீக்கப்படும் என மக்களவை எதிர்க் கட்சி தலைவர் ராகுல் காந்தி கூறினார். மேலும் அவர் பிரதமர் மோடி, அதானியின் தொடர்பு பற்றி கேலி செய்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி மும்பையில் பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி அளித்தார்.

பேட்டியின்போது அவர் கூறியதாவது :–

**அதானிக்கு முக்கியத்துவம்!**

மராட்டிய சட்டசபை தேர்தல் 2 சித்தாந்தங்கள் மற்றும் சில கோடீஸ்வரர்கள் – ஏழை மக்கள் இடையேயானது. ரூ.7 லட்சம் கோடி மதிப்பிலான பாக்ஸ்கான், ஏர்பஸ் திட்டங்கள் மராட்டியத்தில் இருந்து 2 குஜராத்துக்கு இடம் மாறியது. மராட்டிய மக்களின் நலனை மகாவிகாஸ் அகாடி கூட்டணி பாதுகாக்கும். மும்பையில் தாராவி மேம்பாட்டு திட்டத்தில் ஒரு நபருக்கு உதவி செய்ய ஒட்டுமொத்த அரசியல் எந்திரமும் திருப்பி விடப்பட்டுள்ளது. மராட்டிய மக்களின் நலனை விட தொழில் அதிபர் கவுதம் அதானிக்கு தான் பா.ஜனதா முக்கியத் துவம் கொடுக்கிறது.

தாராவி மேம்பாட்டு திட்டம் நியாயம் இல்லாதது. ஒரு நபரின் ஆதாயத்துக்காக மேற்கொள்ளப்படுகிறது. டெண்டர் வழங்கப்பட்டதில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. ஒரே ஒரு நபருக்கு நாட்டில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள், இந்தியாவின் சொத்துகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு எங்கள் முன்பு மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பு மேற்கொள்வோம். அதுதான் எங்களின் மைய தூண்.



50 சதவீத இடஒதுக்கீடு உச்ச வரம்பு நீக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பிரதமர் கோஷம் – கிண்டல்!**

இதேபோல ராகுல்காந்தி பிரதமர் மோடியின் ‘ஏக்ஹை தோ சேப் ஹை’ (ஒன்றுப்பட்டால், பாதுகாக்கப்படுவோம்) என்ற கோஷத்தை கிண்டல் செய்யும் வகையில் பாதுகாப்பு பெட்டகத்துடன் (லாக்கர்) பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டார். அவர் பிரதமரின் கோஷத்துக்கும், தாராவி மேம்பாட்டு திட்டம் அதானிக்கு வழங்கப்பட்டதற்கும் தொடர்பு இருக்கிறது என்றார். மேலும் அவர் அந்த லாக்கரில் இருந்து 2 போஸ்டர்களை வெளியே எடுத்தார்.

அதில் ஒரு போஸ்டரில் பிரதமர் மோடியும், தொழில் அதிபர் கவுதம் அதானியும் இருந்தனர். மேலும் அந்த படத்தில் ‘ஒன்றுபட்டால், பாதுகாக்கப்படுவோம்’ என எழுதப்பட்டு இருந்தது. மற்றொரு போஸ்டரில் தாராவி வரைபடம் இருந்தது.

**கவனிக்கப்படாமல் உள்ள தாராவி மக்கள் நலன்!**

போஸ்டர்களை காட்டி ராகுல் காந்தி பேசும்போது, “ஒன்றுபட்டால், பாதுகாக் கப்படுவோம் என பிரதமர் மோடி கூறுகிறார்.

இதில் கேள்வி என்னவெனில் யார் பாதுகாப்பாக இருப்பார்கள் என்பது தான். தாராவி மேம்பாட்டு திட்டம் திட்டம் மூலம் அதானி லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான நிலத்தை அபகரிப்பதற்கு உதவி செய்வது தான் ”ஒன்றுபட்டால், பாதுகாக்கப்படுவோம் கோஷத்தின் முக்கிய நோக்கமாகும். தொழில் அதிபரின் நலனை பாதுகாக்க தாராவி மக்களின் நலன் கவனிக்கப்படாமல் உள்ளது.

தாராவி ஏழை மக்களுக்கானது. அவர்களுக்குச் சொந்தமான நிலத்தை மகாவிகாஸ் அகாடி மற்றும் காங்கிரஸ் உறுதி செய்யும். ஆட்சியாளர்களுக்கு வேண்டிய தொழில் அதிபர்களுக்கு திட்டங்களை ஒப்படைக்க மற்ற தொழில் அதிபர்களுக்கு மத்திய முகமைகள் மூலம் அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்றார்.